செ.வெ.எண்: 16/மே நாள்: 07.05.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி 10.05.2016 அன்று நடைபெறவுள்ள மாபெரும் வாக்காளர் விழிப்புணர்வு நிகழிச்சியில் பொதுமக்கள் அதிகளவில் கலந்துகொள்ள வேண்டும்

**மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் வருகின்ற 10.05.2016 அன்று அனைத்துத்துறை அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் ஒரே நேரத்தில் (காலை 10 மணிக்கு) வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொள்ளும் மாபெரும் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. பொதுமக்கள் தங்களது அருகில் உள்ள வாக்காளர் உறுதிமொழி ஏற்கும் இடங்களுக்கு சென்று உறுதிமொழியினை எடுத்துக் கொள்ள வேண்டும் என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

சட்டமன்ற பொதுத்தேர்தல்-2016-க்கான வாக்குப்பதிவு வருகின்ற மே-16 அன்று நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு 100 சதவித வாக்குப்பதிவினை இலக்காகக் கொண்டு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இந்திய தேர்தல் ஆணையம், வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் மாபெரும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்திட அறிவுருத்தியுள்ளது.

அதனடிப்படையில் வருகின்ற 10.05.2015 அன்று இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்துத்துறை அரசு அலுவலகங்கள், கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சி அலுவலகங்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத்திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெறும் இடங்கள், தொழிற்சாலைகள், தன்னார்வ தொண்டு நிறுவன அலுவலகங்கள், அனைத்து கல்வி நிலையங்கள், தனியார் வணிகவளாகங்கள், பொதுமக்கள் கூடுமிடங்களில் ஒரே நேரத்தில் (காலை 10 மணிக்கு) வாக்காளர் உறுதிமொழி ஏற்கப்பட உள்ளது.

எனவே, வாக்காளர்கள் அனைவரும் தங்களது அருகில் உள்ள வாக்காளர் உறுதிமொழி ஏற்கும் இடங்களுக்கு சென்று உறுதிமொழியினை எடுத்துக் கொண்டு இம்மாபெரும் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியினை வெற்றியடைய செய்ய வேண்டும் என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**